

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம் தெற்கு வடக்கு ஒன்றிய கழகம் சார்பில் திருமயம் ஏ.கே.பி.திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுஉறுப்பினர் கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி கலந்து கொண்டு கழக தொண்டர்களின் கோரிக்கை கேட்டறிந்து ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.ஆர்.அண்ணாமலை ரகுபதி, மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், திருமயம் வடக்கு தெற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் அழகு சிதம்பரம், இரா.கணேசன் மற்றும் இரா.மேகநாதன், தேவி, சுப.துரைராஜா, ராஜமாணிக்கம், முல்லை ரமேஷ் மற்றும் மாவட்ட ஒன்றிய மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில், நேற்று முன்தினம் (28.08.2024) நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றை செயல்படுத்துதல் தொடர்பாக, அனைத்து தலைமைப் பொறியாளர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷ மஹாஜன், திருமதி. கு. இந்திராணி, இயக்குநர்/பகிர்மானம் (மு.கூ.பொ) மற்றும் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எஸ் ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன்- கவிச்சுடர் கவிதைப் பித்தன் சிறப்புரை!

# புதுக்கோட்டை மாநகர பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பெரியண்ணன் அரசு - டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ பங்கேற்பு!

புதுக்கோட்டை, ஆக.30-

புதுக்கோட்டை மாநகர பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் மாநகர அவைத் தலைவர் அ. ரெத்தினம் தலைமையில் புதுக்கோட்டை ஜியோ பார்க் ஓட்டலில் 25.08.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாநகர செயலாளர் ஆ. செந்தில் அனைவரையும் வரவேற்று சிறப்புரையாற்றினார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும் சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகியோர் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள் .

இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மாவட்ட அவைத் தலைவர் அரு. வீரமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப.சரவணன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ்.கருப்பையா, பி. ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர் துணை மேயர் எம். லியாகத் அலி, மேயர் திலகவதி செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, மாநகர துணைச் செயலாளர்கள் மா.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, பா.ரெங்கராஜ், மாநகர பொருளாளர் சேட் (எ) ஷாஜகான், தவ .பாஞ்சாலன், எம்.எம்.பாலு, மணிமொழி மனோகரன், செந்தாமரை பாலு,

டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், அரங்கநாயகம், கவி வேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துசாமி, இராம.செல்வராஜ், வை. நடராஜன், தெய்வானை, இதயம் அப்துல்லா, எம்.கே.அறிவுடை நம்பி, சி.மதியழகன், டி.அப்புக் காளை, கனகம்மன் பாபு, பால்ராஜ், ரவீஸ் ரவி, விஏடிசி ராஜேந்திரன், எல் ஐ சி ரமேஷ், பிரேம் ஆனந்த், மு.ராஜதுரை, செ.கணேஷ், ராமலிங்கம், புதுநகர் குமார், எஸ். எம்.ஏ.அறிவழகன், ஆர். ரமேஷ், எஸ்.நாகராஜன், செ சுப்பிரமணி, எஸ்.செல்வம், எஸ்.ராமச்சந்திரன், ஆ.முருகேசன், கே.எம்.எஸ். குமார், கா இளங்கோவன், தட்சணாமூர்த்தி, முகம்மது ஆஷிப், முகம்மது ரபீக், க..செல்லையா.,

செ.இளங்கோவன், செல்வராஜ், ஆனந்த், சரவணன், நவீன் ஆண்டனி, அருண்குமார், ஆர்.எம்.சத்யா, ஆறுமுகம், ரவிச்சந்திரன், சுப. கார்த்தி, கிருஷ்ணன், பாலு, மாரியப்பன், தியாகு, ராஜேந்திரன், வாஹித் அலி, கதிரேசன், பிரபு, அண்ணாத்துரை, அறிவுடை நம்பி, க.முத்துக்கருப்பன், சுரேஷ் குமார், விஜயக்குமார். கண்மணி சுப்பு மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி

# திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர், ஆக.30-

திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அடுத்தாண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி ஆகஸ்ட் 20 ஆம் தேதி முதல் அக்டோபர் 18 ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs) வீடு, வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள

முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

இதையடுத்து, ஒருங்கிணைந்த வாக்காளர் வரைவு பட்டியல் அக்டோபர் 29 ஆம் தேதி வெளியிடப்பட்டு அன்றிலிருந்து நவம்பர் 28 ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றுக்கான விண்ணப்பங்கள் பெறப்படும். 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். எனவே அக்டோபர் 29 ஆம் தேதி முதல் நவம்பர் 28 ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள், தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வழங்கலாம்.

அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLOs), வாக்கு பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றிற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வயதுக்கான சான்றாக, பிறப்பு சான்றிதழ், ஆதார், பான் அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10 ஆம் வகுப்பு அல்லது 12 ஆம் வகுப்பு சான்றிதல், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயம் ஆகும்.

மேலும் http://voters.eci.gov.in, https://voterportal.eci.gov.in ஆகிய இணையதள முகவரி மற்றும் "வாக்காளர் உதவி" கைபேசி செயலி (VOTER HELPLINE Mobile App) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதியும் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இப்பணியில் திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்டபட்ட அனைத்து நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் (BLA2) இணைந்து மேற்கண்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### அமைச்சர் சு.முத்துசாமி, திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்பு!

# கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!

கோவை, ஆக.30-

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா. கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், அன்புத் தளபதி அவர்கள் தலைமையில் கடந்த 16.08.2024 அன்று நடைப்பெற்ற மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டிற்கான சட்டசபை தேர்தலின் தி.மு.க. ஒருங்கிணைப்பு குழுவினர்

அமைச்சர் கே.என்.நேரு. ஆர்.எஸ்.பாரதி. அமைச்சர் எ.வ.வேலு . அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள்



மற்றும். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலில் கோவை மாநகர் மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகிற 2.9. 2024 அன்று மாலை 4.30 மணியளவில்

வரதராஜபுரம் சாய் விவாகா காலில் நடைபெற உள்ளது.

இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில்,தமிழ்நாடு வீட்டு வசதித்துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மற்றும் மாவட்ட பொறுப்பு அமைச்சர் சு.முத்துசாமி,

தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர் இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் மாநகர் மாவட்ட நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள்,மேயர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

பகுதிக்கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நிலைக் குழு தலை வர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,பகுதிக்கழக, வட்டக் கழக நிர்வாகிகள்.அனைத்து கழக செயல் வீரர்கள்,BLA2 பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழகத் தொண்டர்கள், மற்றும் கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்



ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் கவுந்தப்பாடி புதூரில் இருந்து செந்தாம் பாளையம் வரை முதல்வர் கிராம சாலை திட்டத்தின் கீழ் 1 கோடியே 3 லட்ச ரூபாய் மதிப்பில் புதிதாக தார் சாலை அமைக்கும் பணிகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், ஒன்றிய செயலாளர் கே.பி.துரைராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் என்.சத்தியமூர்த்தி, சர்க்கரை பழனிச்சாமி, சலங்க பாளையம் பேரூராட்சி தலைவர் மணிமேகலை பழனிச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ்.,(ஆர்த்தோ) தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், மாநில துணைச் செயலாளர்கள் இரா.அன்வர்கான், நூருல்லா, ஜோசப்ராஜ், விஜயகுமார், முனைவர் ஜான், அடையாறு ஷபீல் , என்.பி.எம்.ஷேக் அப்துல்லா,கா.ரஃபி அகமது, மு.ஷாகுல் அமீது மேலும் அனைத்து மாவட்ட மற்றும் மாநகர் அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

### கலைஞரின் வழியில் திராவிட மாடல் அரசு நடத்தும் முதல்வருக்கு வருகிற

# சட்டமன்றத் தேர்தலில் 200 இடங்களுக்குமேல் வென்றிட உழைப்போம்!

## வேலூர் மாவட்ட தொலைத் தொடர்பு துறை எஸ்.சி., எஸ்.டி. சம்மேளன முன்னாள் செயலாளர் பொன்.சேகரன் அறிக்கை!

வேலூர், ஆக. 30-

வேலூர் மாவட்ட தொலைத் தொடர்பு துறை எஸ்.சி., எஸ்.டி., சம்மேளன முன்னாள் செயலாளர் பொன்.சேகரன் விடுத்துள்ள அறிக்கையில், முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசை நடத்தும் முதல்வருக்கு வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றிகளைப் பெற உறுதுணையாக உழைப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

முன்னாள் முதலமைச்சர், இலக்கிய சோலை திரையுலக முத்திரை, தனிநலங்கருதா பொதுநலம், சீர்திருத்த செம்மல், போன்ற எண்ணற்ற கொள்கைகாரார், முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்களை நாகரீகமற்ற முறையில் கைது செய்ததை கண்டித்து அகில இந்திய அஞ்சல் மற்றும் தொலை தொடர்பு துறை SC/ST சம்மேளன . வேலூர் வேலூர் மாவட்ட செயலாளர் பொன்.சேகரன் மற்றும் அங்கத்தினர்கள் அனைவரும் சேர்ந்து 'We strongly condemn the uncultured arrest of former Chief Minister Thiru. Kalaizar Karunanidi. Pray Intervene. P.Segaran District Secretary, Members of Telecom SC/ST federation Vellore" என்று சென்ற 30.06.2001ம் நாள் மாண்புமிகு குடியரசு தலைவர், பிரதம மந்திரி, ஒன்றிய உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு, கோடான கோடி தொண்டர்களில் கடைசி தொண்டனாக இருந்து அனுப்பிய தந்தியின் "உண்மை நகல்" 'Certified True Copy' இது



எனக்கு கிடைத்த பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறேன்.

மேற்கூறிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கேவலமான கைது நடவடிக்கை தொடர்பாக நடந்த நீதிமன்ற விசாரணையில், விசாரணை நடத்திய அவரது பெயர் நீதியரசன் அசோக்குமார் என நினைக்கின்றேன். (இவர் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி ஏற்கும் முன் கோவையில் Labour court Judge ஆக பதவி வகித்தவர்) நீதியரசர் அவர்கள் "முதலமைச்சராக பதவி வகித்தவர் அவரை நடுவீதியில் உட்கார வைத்திருப்பதுதான் அவருக்கு கொடுக்கும் மரியாதையா? இது போன்றுதான் நடத்துவீர்களா? என்று வழக்கில் ஆஜரான அரசு வழக்கறிஞர், மற்றும் காவல்துறை அதிகாரியினரை பார்த்து நீதியரசர் அவர்கள் எழுப்பிய கேள்வி, கைது செய்ய ஆணையிட்ட அராஜக நெஞ்சில் பாய்ந்த மிக, மிக கூர்மையான ஈட்டிமுனை வார்த்தைகள்" என்று அன்றைய கைது நடவடிக்கையின் வேதனையில ஒரு சிறு ஆறுதல் அடைந்தேன்.

தற்போது 2024ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் திராவிட மாடல் ஆட்சியின் தளகர்த்தா, திக்கெட்டும் திராவிட மாடல் ஆட்சியின் கொடிபறக்க உறக்கமின்றி உழைத்து வரும் தலைவர் எத்தனை புது, புது ஆட்சிகள்

தோன்றினாலும், தமிழ் நாட்டு மக்களை திராவிட மாடல் ஆட்சியிலிருந்து திசை திருப்ப முடியாமல் 40க்கு 40 என்ற வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் பலநேரங்களில் நிரூபித்தது போல் வருகின்ற 2026ல் நடக்கும் மாநில தேர்தலிலும் 200க்கும் குறையாத வெற்றியை தமிழநாட்டின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களில் ஒப்படைத்து, அகில இந்திய அளவிலும் INDIA கூட்டணியில் 400க்கும் குறையாமல் வெற்றி பெற்று நமது இந்தியாவின் ஜனநாயத்தையும் காப்பாற்றி கலைஞரின் நினைவிடத்தில் சமர்பிக்க உறுதி ஏற்ப்போம்.

இவ்வாறு வேலூர் பொன்.சேகரன் தெரிவித்துள்ளார்.



திருவையாறு சட்டமன்ற தொகுதி, திருவையாறு தெற்கு ஒன்றியம், செந்தலை, கருப்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து அ.தி.மு.க ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அரவிந்த் தலைமையில் அ.தி.மு.க மற்றும் மாற்றுக் கட்சி நிர்வாகிகள் 200 பேர் தஞ்சை மத்திய மாவட்ட கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் முன்னிலையில் தி.மு.க வில் இணைந்தனர். உடன் திருவையாறு ஒன்றிய பெருந்தலைவர் கோ.அரசாபகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எம்.கௌதமன், வை.சிவசங்கரன், பேரூர் கழக செயலாளர்கள் சி.நாகராஜன், எ.அகமதுமைதின் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.